## NSA செயல்திட்டத்தினூடாக நாம் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள்.

நாம் கிராமத்தை தரிசனம் செய்து கிராம மக்களுடன் எமது திட்டம் பற்றிய கலந்துரையாடல்களின் பொழுது கிராமங்களின் நிலை எப்படி இருக்கிறது, கிராமங்களிலுள்ள அமைப்புக்களின் நிலை எப்படி இருக்கிறது. இந்த அமைப்புகளின் நிர்வாகிகளின் அறிவு, அனுபவம், ஆற்றல்கள் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதனடிப்படையில் பார்த்தால் கிராமங்களின் பொருளாதார நிலையில் மிகவும் பின்னடைந்தும். மக்கள் விழிப்புணர்வு அற்ற நிலையிலும் நிறுவனங்களால், அதிகாரிகளால் எமாற்றப்பட்டு அலைக்கழிக்கப்பட்ட நிலையிலும் மக்கள் இருப்பதைக் உணரக்கூடியதாக இருக்கிறது. உள்ளூர்மட்ட தலமைத்துவம் கூட சிறப்பானதாக செயற்பட்டதாகக் காணமுடியவில்லை. பல கிராமங்களில் வருடக் கணக்காக நிறுவனங்கள் பணியாற்றி இருந்தும் மக்களை அணிதிரட்டுவதில் தோல்வியைக் கண்டுள்ளனர். இம்மக்களில் 10 சதவீதத்தினரைக்கூட விழிப்புணர்வுடைய விதத்தில் மாற்றமுடியாமல் உள்ளது தென்பட்டு இருக்கிறது. அதே வேளையில் அங்குள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படாமலும் அவர்கள் சமூக முன்னேற்றத்தில் தம்மை ஈடுபடுத்தமுடியாத நிலையிலும் புறந்தள்ளப்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

குறித்த கிராமங்களில் ஏராளமான வாய்ப்புக்கள் இருந்தும் சிறந்த மனிதவளங்கள் இருந்தும் அவற்றிற்கு வாய்ப்பளிக்கப்படாமலும் அவர்கள் முன்வந்து செயற்பட தயக்கம் காட்டுவதனால் தான் கிராமங்களின் நிலை தேக்கமாகக் காணப்படுகிறது.

இளைஞர் சமூகத்திற்கும் சமூகத்தில் ஆர்வத்தோடு சமூகப்பணியாற்ற முன்வருவதற்கும் தட்டிக் கொடுத்து ஊக்கமளித்து செயற்படுத்தப்பட்டால்இந்த நிலைமையை மாற்றியமைக்கமுடியும்.

**பயிற்சி**

சங்கங்களுக்கான தலமைத்துவம், ஆவணப்படுத்தல், திட்டமிடல், அணிதிரட்டல், கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துதல் போன்ற தலைப்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சிகளில் 2, 3 பேரைத்தவிர தொடர்ச்சியாக எவரும் சமூகமளிக்கவில்லை. இதனை நோக்குகின்ற போது மேற்குறிப்பிட்டவாறு கிராமமட்ட தலமைத்துவங்கள் கற்றுக்கொள்வதிலும் , தமது ஆளுமையை வெளிப்படுத்துவதிலும், ஆற்றல்களை விருத்தி செய்வதிலும் ஆர்வம் காட்டவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுமட்டுமில்லாமல் சில கிராமங்களிலுமே முற்றாகவே இப்படியான செயற்திட்டங்களுக்கு ஆர்வம்காட்டும் நிர்வாகிகள் எவரும் இல்லை என்பதையும் அவதாணிக்கக்கூடியதாக இருக்கிறது.

பயிற்ச்சிக்கு , கலந்துரையாடலுக்கு , கூட்டங்களுக்கு வருகை தந்தோரது பட்டியல்கள் நாங்கள் தயாரித்த பொழுது இவை புள்ளிவிபர ரீதியாக அவதாணிக்கக்கூடியதாக இருக்கிறது.

அதே வேளையில் எல்லாக் கிராமங்களிலும் உள்ள பெண்களும், பெண்கள் அமைப்புக்களும் ஆண்களுடன் ஒப்பிடுகையில் சிறப்பாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆவர்களுடைய பங்குபற்றுதலும் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக பயிற்சிகளிலும் கூட்டங்களிலும் ஆனால் கிராமத்திலுள்ள கலந்துரையாடல் கூட்டங்களில் பெண்கள் முன்வருவது குறைவாகக் காணப்படுகிறது. இதற்குப் பிரதான காரணமாக கிராமத்திலிருக்கின்ற ஆனாதிக்கத்தைக் குறிப்பிடலாம். ஆண்களுக்கு முன்னால் தாம் எதாவது கதைத்துவிட்டால் தமது இருப்புக்கு கேள்விக்குறியாகிவிடுமோ அல்லது தங்களை தவறாக விமர்சித்துவிடுவார்களோ என்ற அச்சம் காரணமாக பெண்கள் கிராமமட்டத்தில் செயற்பாடுகளுக்கு முன்வருவது குறைவானதாகக் காணப்படுகிறது ஆயினும் கிராமத்தில் ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

குறித்த ஒரு கிராமத்தில் எமக்கு ஏற்பட்ட அனுபவம், அக்கிராமத்தில் மாதர் சங்கத் தலைவி ஒருவர் தாம் செய்கின்ற செயற்பாடுகள் தொடர்பாக எடுத்து உரைத்துக்கொண்டு இருந்தபொழுது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எழுந்து எதற்கு எடுத்தாலும் நீங்கள் தான் இதைப்

பெரிசாகச் செய்கின்றீர்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே ஏன் நாங்கள் எதுவும் செய்யவில்லையா? என்று அவரைக் குறுக்குட்டு இடைமறித்தார். அப்போது நாம் அவர் சொல்லி முடிந்தபிறகு உங்கள் அனுபவங்களைச் சொல்லுங்கள் நீங்கள் செய்த சாதனைகளைச் சொல்லுங்கள் என்று அவரிடம் கூறியபோது அவர் இதுவரையிலும் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை இப்போதுதான் சங்கத்தைப் பொறுப்பெடுத்திருக்கிறோம் என்று மட்டும் பதில் சொன்னார். இதிலிருந்து கிராமமட்டத்தில் பெண்களை ஊக்குவிக்கும் தன்மை குறைவாக இருக்கிறது என்பதும் சில இடங்களில் பெண்களுடைய செயற்பாடுகளுக்கு தடை இருக்கிறது என்பதையும் நாம் காணக்கூடியதாக இருந்தது. சில இடங்களில் நன்றாக எழுதக்கூடிய , கலந்துரையாடக்கூடிய பெண்கள் இருந்தும் குழு வேலைகளிலும் கலந்துரையாடல்களிலும் அவர்களுக்கு நாம் முன்னுரிமை அளித்து ஊக்கம் அளித்தும்கூட கிராமத்து ஆண்கள் அவற்றை தடுத்து நிறுத்தியதை நாங்கள் கண்ணுக்கூடாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஆயினும் இப் பயிற்சி கலந்துகொண்ட உறுப்பினர்களிடையே அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்தியது. முதலாவது இப் பயிற்சியில் கலந்துகொண்ட சுமார் 60 வீதத்தினர் மிகுந்த உற்சாகத்தோடும் தாம் அறிவால் வளர்ந்து கொள்ள வேண்டும் சமூகத்தில் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதனையும் பயிற்சி முடிந்தவுடன் நாம் அவதாணிக்கக்கூடியதாக இருக்கிறது.

அடுத்து பயற்சியினை முடித்துக் கொண்டு ஒவ்வொரு மாதங்களிலும் ஏனைய கூட்டங்கள் கலந்துரையாடல்கள், பயிற்சிகளுக்கு வருகின்ற போது கலந்துரையாடிய போது சுமார் 30 வீதமான கற்றுக்கொண்ட விடயங்களை சங்கங்களில் இவர்கள் செயற்படுத்தியதை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக ஆவணப்படுத்துதல், கிராமமக்களை அணிதிரட்டுதல் , சங்கத்தைப்புணரமைத்தல், எதிர்காலத்திட்டமிடல் போன்ற விடயங்களில் அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளல் போன்ற விடயங்களில் இச்சங்கங்கள் ஈடுபட்டதையும் குறிப்பாக பெண்கள் அமைப்புக்கள் இவற்றில் முன்னிலை வகிப்பதையும் இப்பயிற்சியின் பின்னர் நாம் அவதாணிக்க முடிந்தது.

**சனசமூக நிலைய உருவாக்கம்.**

சனசமூக நிலைய உருவாக்கம் .தொடர்பாக நாம் இவ் விடயத்தைக் கவனமாகத்திட்டமிட்டு இயங்காத சங்கங்கள் அதன் பிரதிகளை வைத்துக்கொண்டு சனசமூக நிலையங்களை அவர்களை இணைத்துப் புணரமைப்பது எவ்வாறு என்பதை கவனமாக ஆராய்ந்தோம். இதனடிப்படையில் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் எப்படி இருக்க வேண்டும், அவர்கள் எத்தகைய ஆற்றல்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் என்னென்ன செயற்பாடுகளை சனசமூக நிலையங்களினூடாகச் செய்யலாம் என்பதை எழுத்து மூலமான வரைபு ஒன்றைத் தயாரித்த பிறகு தான் நாங்கள் இதற்கான ஆலோசனைகளைக் கூட்டங்களை எல்லாக் கிராமங்களிலும் நடாத்தினோம்.

இக்கூட்டங்களின் விளைவாக பொறுப்புக்களை யார் எடுக்க முன்வருகிறார்கள் எனக் கேட்ட போது எவரும் பொறுப்பு எடுக்க முன்வரவில்லை. ஏனெனில் பொறுப்புக்கள், கடமைகளைப் பற்றி தெளிவாக விளக்கமளிக்கப்பட்ட பிறகு. அதற்கு தாங்கள் பொறுப்பு எடுத்தால் அது சுமையாக இருக்கும் என்றதாலும், பொறுப்புச் சொல்ல வேண்டி வரும் என்றதாலும் பலர் முன்வராத நிலமையினை அவதாணிக்கக் கூடியதாக இருந்தது. கடந்த காலத்தில் பொதுக் கூட்டங்களில் யார் யாரையோ பிரேரித்து ஆமோதித்து தெரிவுசெய்துவிட்டு சென்றுவிடுவார்கள் அதன் பின்னர் அவர்கள் செயற்படுவதேயில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு இருந்தமையினால் நாம் மற்றுமொரு தந்தரோபாயத்தைப் பயன்படுத்தி தான் பொதுமக்கள் ஆர்வலர்கள் முன்வாருங்கள் என்று கேட்ட போது எவரும் முன்வரத் தயாராகவில்லை.

பின்னர் அவர்களுக்கு விளங்கப்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்திய பிறகு பெரும்பாலானவர்கள் தயக்கத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும் சராசரியாக 5-8 பேர் முன்வந்தார்கள். இதில் பெண்கள் கிராமத்தில் தங்கள் பெயரை முன்னுக்கு கொடுப்பதற்கு எல்லாக் கிராமங்களிலும் தயக்கம் காட்டியதை நாம் அவதாணிக்கக்கூடியதாக இருந்தது.

இவர்கள் சிறந்த செயற்பாடுகளைக் கொண்டிருந்தும்கூட செயற்பட முன்வருவதற்கு கிராம மட்டத்தில் தயங்கியது பெண்களுக்கான தடை இருந்ததை எம்மால் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. ஆயினும் நாம் ஏற்கனவே சிறப்பாக செயலாற்றியவர்களை ஊக்கப்படுத்தி நீங்கள் செயற்பட முன் வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்கு அமைய பெண்கள் பெயர்களைக் கொடுத்தார்கள்.

## கிராம அபிவிருத்திச் செயற்திட்டம்.

தாமாக முன்வந்து செயற்பட முனைந்த குழுவினருக்கு கிராம அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக விளக்கமளித்து கிராமத்தின் தகவல்களை வழங்குமாறு பொறுப்பு வழங்கப்பட்டது. ஒரு மாதத்தின் பின்னர் வழங்கப்பட்ட எழுத்து மூலமான ஆவணங்களை உற்றுநோக்கிய பொழுது 20 கிராமங்களில் 6 கிராமங்களில் மட்டும் இவர்கள் எழுத்து மூலமாக தயாரித்து தந்திருந்தார்கள். குறிப்பாக தேவன்பட்டி, பாப்பாமோட்டை ஆகிய 2 கிராமங்களின் தகவல்களும் மிகவும் தரம் வாய்ந்நனவாகவும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விதத்திலும் காணப்பட்டது ஏனையவை எவையும் பொறுப்பாகத் தரப்படவில்லை. சுமார் 8 சங்கங்களின் தகவல்கள் ஏனோதானோ என்று பொறுப்பற்ற முறையிலே எழுத்து மூலம் வழங்கப்பட்டது. சில சங்கங்கள் தகவல்களை வழங்கவே இல்லை இந்த நிலையில் கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தை நாம் விரைவுபடுத்துவதோ சனசமூக நிலையங்களை பதிவுசெய்தல் என்பதொ சாத்தியமாகாத ஒன்றாகும். செயல்திட்டத்திற்காக மட்டும் இவற்றை நாங்கள் செய்ய முனைந்தோம் ஆனால் எதிர்காலத்தில் இவை தோல்வியில் முடியும் என்பது எமது கருத்தாகும். இதைப்பற்றி நாம் மீள்பரிசோதனை செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தை நாம் பூரணமாகச் செயற்படுத்துவதற்கு நீண்ட காலம் தேவைப்படும் என்று உணர்கின்றோம். கிராமத்தின் தகவல்கள் திரட்டுவது அதில்மக்களை ஈடுபடுத்துவது, மக்களுக்கு நாங்கள் தயாரிக்கப் போகும் கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ஆவணத்தினை விளங்கிக்கொள்வது, அதற்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுப்பது என்பது ஒரு நீண்டகால செயற்திட்டமாகும். எமது கணிப்பீட்டின்படி இதற்கு மேலும் 6 மாதகாலப்பகுதி தேவைப்படும் என்று கணிப்பீடு செய்துள்ளோம் பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களிடம் காணப்படுகின்ற ஒரு பொறுப்பற்ற விடயம் என்னவென்றால் நிதி வழங்கும் நிறுவனத்திடம் பெறப்பட்ட நிதியை செலவழித்து கணக்குகாட்ட வேண்டும் ஏதோ அறிக்கை எழுத வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாகக் காரியங்களைச் செய்வது. ஆனால் ஒரு சமூகம் செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்களின் உரிமையை தாம் கொண்டிராத இடத்தில் இவை வெற்றியளிக்காது என்பதை மனத்தில் கொண்டு நாம் இவற்றை யதார்த்தபூர்வமாக அணுக வேண்டும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.